CLSR பணியாளர்கள் யார்?

வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பின்னணியிலிருந்து வந்த பயிற்சி பெற்ற நிபுணத்துவம் வாய்ந்தவர்களான CLSR ஊழியர்கள், கஷ்டங்களை அனுபவிக்கும் மக்களுக்கு உதவுவதில் திறமை வாய்ந்தவர்கள். இக் கஷ்டங்கள் ஒரு நபரின் கடந்தகால அனுபவங்கள் அல்லது தற்போதைய சூழ்நிலையுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

குறித்த நபர் ஆங்கிலத்தை விடுத்து வேறு ஒரு மொழியைப் பேச விரும்பினால் என்ன செய்வது?

CLSR ஊழியர்கள் பலமொழிகளைப் பேசுகின்றனர். மேலும் தேவைப்படும்போது யாவரும் தொழில்வாண்மை மிக்க மொழிபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்துகின்றனர்.

நபரின் தகவல் பாதுகாப்பானதாக வைக்கப்படுமா?

CLSR மூலம் வழங்கப்படும் சேவைகள், உதவிகள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்படும். New Horizons மற்றும் STARTTS ஆகியவை, ஒரு நபர் எங்களுக்கு அனுமதி அளித்தால் மட்டுமே அவர்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும், அதுவும் அவர்களுக்கு உதவும் நோக்கிலேயேயாகும். இருப்பினும், ஒரு நபர் எங்களிடம் அவர் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொள்ளக் கூடும் அல்லது வேறொருவருக்குத் தீங்கு விழைவிக்கக் கூடும் எனக் கூறினால், அப்போது CLSR ஊழியர்கள், அந்த நபரையும் மற்றவர்களையும் பாதுகாப்பதற்காக பிற சேவைகளைப் பயன்படுத்துவர். மேலும், தற்போது CLSR-ஐப் பயன்படுத்தும் நபர்கள் இத் திட்டத்தை மதிப்பீடு செய்து உதவ, தன்னார்வத் தொண்டர்களால் தொடர்பு கொள்ளப்படலாம்.

STARTTS -ஐப் பற்றி

STARTTS என்பது ஒரு நிபுணத்துவம் வாய்ந்த, இலாப நோக்கமற்ற அமைப்பாகும். இது 30 ஆண்டுகளுக்கும் மேலாக கலாசார ரீதியில் பொருத்தப்பாடுடைய உளவியல் சிகிச்சையையும், ஆதரவையும், மற்றும் சமூக இடையீடுகளையும் வழங்கி சித்திரவதைத் தழும்புகள் மற்றும் அகதிகள் அதிர்ச்சி மனவடுக்களையும் குணப்படுத்துவதற்கு மக்களுக்கும், சமூகங்களுக்கும் உதவியுள்ளதுடன், மேலும் அவர்களின் வாழ்க்கையை அவுஸ்திரேலியாவில் மீளக் கட்டமைப்பதற்கும் உதவியுள்ளது. சேவைகள், பொது ஆலோசனை மற்றும் கொள்கைப் பணிகளின் மூலமாகப் பயிற்சியளிப்பதனூடாக STARTTS சாதகமான மீட்புச் சூழலையும் வளர்க்கிறது.
www.startts.org.au

தொடர்பு STARTTS: **02 9646 6666**
(காரியாலய அமைவிட விபரங்களுக்கு **www.startts.org.au/contact** என்ற தளத்திற்குச் செல்லவும்).

New Horizons (புதிய அடிவானங்கள்) பற்றி

தமது நல்வாழ்வை மேம்படுத்தவும், மற்றும் எங்கள் பரந்தளவிலான சேவைகள் ஆதரவுகள் மூலமாக அவர்களின் திறனை உணரவும் New Horizons மக்களுக்கு உதவியளிக்கிறது. அரை நூற்றாண்டு காலமாக New Horizons ஆயிரக்கணக்கான அவுஸ்திரேலியர்களுக்கு வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு உதவியுள்ளது. இயலாமை, மனநலம் மற்றும் வயோதிபப் பராமரிப்பு ஆகியவற்றில் நாங்கள் நிபுணத்துவம் பெற்றுள்ளோம். உங்கள் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, நிபுணர்களின் ஆலோசனை தொடக்கம், அன்றாட வாழ்க்கைத் திறன்களுடன்கூடிய நடைமுறைக்கான உதவி வரை பலவிதமான ஆதரவுகளை நாங்கள் வழங்குகிறோம்.
www.newhorizons.org.au

New Horizons-ஐ **1300 726 372** இல் தொடர்பு கொள்ளவும்.

NSW GOVERNMENT Health

CLSR -க்கு NSW Health
நிதியுதவி அளிக்கிறது

STARTTS

newhorizons
wellbeing. done well.

சமூக வாழ்வு

அகதிகள் மற்றும் புகலிடம் கோருபவர்களுக்கு ஆதரவுதவிகளை அளிக்கிறது

(COMMUNITY LIVING SUPPORTS FOR REFUGEES AND ASYLUM SEEKERS – CLSR)

மக்களுக்கு அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கவும், அவர்களின் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைநிலையை மேம்படுத்தவும் மற்றவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் உதவுகிறது.

CLSR திட்டம் யாருக்கானது?

அகதிகள் மற்றும் புகலிடம் கோருவோருக்கான சமூக வாழ்வு ஆதரவுகள் (Community Living Supports for Refugees and Asylum Seekers - CLSR) தமது நல்வாழ்வு தொடர்பான சவால்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுடன் இணைந்து செயல்படுகிறது, நல்வாழ்வுக்கான சவால் அவர்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் செயல்பாடுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது. இச் சவால்கள் ஒரு நபரின் கடந்த காலங்களில் அல்லது தற்போது அவுஸ்திரேலியாவில் அவர்கள் அனுபவித்த அல்லது அனுபவிக்கின்ற கஷ்டமான சூழ்நிலைகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

CLSR என்பது கடந்த 10 ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவுக்கு வந்த, அகதிநிலைப் பின்னணியைக் கொண்ட எந்த வயதையும் உடைய புகலிடம் கோருபவர்களுக்கானது.

CLSR மூலம் ஆதரவைப் பெறுவதற்கு மக்கள் கண்டறியப்பட்ட மனநோயைக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை, இருப்பினும் தமது அன்றாட வாழ்க்கையிலும் செயல்பாடுகளிலும் கடுமையாக பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், நல்வாழ்வு தொடர்பான பிரச்சினைகளை அவர்கள் தொடர்ந்து எதிர்கொண்டிருப்பதாக இருக்க வேண்டும்.

ஒரு நபருக்கு ஏன் CLSR இன் உதவி தேவைப்படக்கூடும்?

ஒரு நபர் அனுபவிக்கக்கூடிய பொதுவான சவால்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கக்கூடும்:

- மருத்துவமனையில் பல தடவைகள் அனுமதிக்கப்படல் மருத்துவமனையிலிருந்து சமீபத்தில் விடுவிக்கப்பட்டிருத்தல்
- நீண்ட காலமாக மன உளைச்சலை உணர்தல்
- தனிமையையும், உதவியற்ற நிலையையும் மற்றும் நம்பிக்கையற்ற நிலையையும் உணர்தல்
- அன்றாடப் பணிகள் மற்றும் நடைமுறைகளைக் கையாள்வதில் சிரமத்தைக் கொண்டிருத்தல்
- ஒருவர் தனது வாழ்க்கையின் கட்டுப்பாட்டை இழந்திருப்பதாக உணர்தல், சுய பராமரிப்பில் சிரமம்
- தலைவலி மற்றும் நோவு
- தூக்கப் பிரச்சினைகள் மற்றும் கெட்ட கனவுகள்
- எதிர்மறைச் சிந்தனை, கவனம் செலுத்துதல் மற்றும் ஞாபகம் தொடர்பான பிரச்சினைகள்

CLSR திட்டம் எவ்வாறு உதவ முடியும்?

CLSR ஆனது, மக்கள் தமது இலக்குகளை நிர்ணயிக்கவும், தன்னம்பிக்கையை வளர்க்கவும், அவர்களின் உடல்நலம், நல்வாழ்வு மற்றும் மற்றவர்களுடனான தொடர்பை மேம்படுத்தவும் தனிநபர் ஆதரவை வழங்குகிறது.

CLSR குறித்த நபரால் வழிநடத்தப்படுவதுடன், மேலும் தேவைப்படுமிடத்து முழு குடும்பத்தினரையும் உள்ளடக்கி, நிலைபாடான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ மக்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

CLSRஆனது, ஒரு நபரின் வாழ்க்கையில் மற்றவர்களுடன் அல்லது சேவைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும், மேலும் ஒன்றிணைந்து செயற்படவும் வேண்டிய ஆதரவையும் வழங்கும்.

சேவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

வழங்கப்படக்கூடிய நடைமுறை ஆதரவின் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- அன்றாட வாழ்க்கைப் பணிகளுக்கு உதவுவதற்கான ஆதரவு: கடைகளுக்குச் செல்லுதல், போக்குவரத்து, சுத்தம் செய்தல், மருந்துகளைக் கையாளல் மற்றும் மருத்துவ சந்திப்புகளில் கலந்து கொள்வதற்கான ஆதரவு.
- வாழ்வதற்கான ஓர் இடத்தைக் கண்டுபிடித்து அதனை வைத்துக் கொள்வதற்கான ஆதரவு.
- கலாச்சார நிகழ்வுகள், சமூக நடவடிக்கைகள், விளையாட்டு மற்றும் உடல் ஆரோக்கிய நடவடிக்கைகள் போன்றவற்றில் மக்களை இணைப்பது போன்ற சமூக மற்றும் பொழுதுபோக்கு ஆதரவு.

ஒரு நபரின் சவால்களை CLSR ஊழியர்கள் எவ்வாறு புரிந்து கொள்வார்கள்?

CLSR ஊழியர்கள் ஒரு நபரின் தனித்துவமான நிலைமை மற்றும் சவால்களைச் செவிமடுப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் ஆர்வமாக உள்ளனர்.

CLSR ஊழியர்கள் வெவ்வேறு கலாச்சார பின்னணியைச் சேர்ந்தவர்கள். மேலும் அகதிப் பின்னணியிலிருந்தான மக்களின் அனுபவங்கள் மற்றும் கலாச்சாரங்களைப் பற்றிய நல்ல புரிந்துணர்வைக் கொண்டுள்ளனர்.

CLSR-இற்குச் சிபாரிசு செய்தல்

CLSR சுய சிபாரிசுகள் உட்பட எந்த மூலத்திலிருந்தும் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்கிறது.
சிபாரிசுகள் செய்வதற்கு அல்லது மேலதிகத் தகவல்களுக்கு:

New Horizons: **1300 726 372** -ஐ அழைக்கவும்:
அல்லது STARTTS: **02 9646 6666** (CLSR-இனைக் கேட்கவும்)
மின்னஞ்சல்: **STTS-CLSRintake@health.nsw.gov.au**

சிபாரிசு செய்யப்பட்ட பின்னர் என்ன நடக்கும்?

அனைத்துச் சிபாரிசுகளும், திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர் உள்ளெடுப்பு மதிப்பீட்டுக்காக ஒரு நபரை நேரடியாக மதிப்பீடு செய்வதற்கான அனுமதியைக் கொண்டிருக்கும்.

CLSR-க்கு எவ்வளவு செலவாகும்?

நாங்கள் உதவும் நபர்களுக்கான அனைத்து CLSR சேவைகளும் இலவசமாகும்.

CLSR மூலம் மக்கள் எங்கே உதவி பெற முடியும்?

STARTTS மற்றும் New Horizons CLSR இடங்கள் பின்வருமாறு:

- West Sydney -இன் உட்பிரதேசம்
- South West Sydney
- Newcastle
- Armidale
- Coffs Harbour

குறித்த நபர் எங்கு செல்ல வேண்டும்?

CLSR ஊழியர்கள் தங்கள் வீடுகளில், சமூகத்தில் அல்லது ஒரு STARTTS அல்லது New Horizons அலுவலகத்தில் என எங்காயினும் தமக்கு வசதியாக இருக்கும் இடங்களில் மக்களைச் சந்திப்பார்கள்.

வெவ்வேறு பகுதிகளில் உள்ள திட்டங்களைப் பற்றிய மேலதிக விபரங்களுக்கு மேலே வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்.